RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

DOI: 10.34256/ijot2125

# திருப்பாவையின் மறைபொருள் - ஓர் ஆய்வு

**பெ. சிவசக்தி** [அ, *]

[அ] தமிழியல்துறை, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி- 626123, தமிழ்நாடு, இந்தியா.

# The Vedic truths in the Thiruppavai An analysis

**P. Sivashakthi** [a, *]

[a] Department of Tamil, Sri Kaliswari College (Autonomous), Sivakasi– 626123, Tamil Nadu, India.
*Corresponding author Email: sivashakthikc@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijot2125
Received: 19-04-2021; Revised: 26-05-2021; Accepted: 28-05-2021; Published: 30-05-2021

**Abstract:** Tiruppavai is the largest treasury for Tamil in Vaishnava bhakti literature. Tiruppavai is the hymn sings of the sleeping living entity to reach the Supreme Soul. It is said to explain the thought of God, the service to the Lord, the reaching of God, and the blessings of The Lord. This article illustrates that a devotional literature for women in world literature is Tiruppavai.

**Keywords:** Tiruppavai, Tamil literature, Vedic, Vaishnava bhakti literature

## முன்னுரை

வைணவ பக்தி இலக்கியங்களுள் தமிழுக்குக் கிடைத்த மிகப் பெரிய கருவூலம் திருப்பாவை ஆகும். உறங்கிக் கொண்டிருக்கும் ஜீவாத்மா பரமாத்மாலை அடைய தட்டியெழுப்பும் பாசுரங்களாகத் திருப்பாவை அமைந்துள்ளது. இறைவனை நினைத்தல், இறைவனுக்குத் தொண்டு செய்தல், இறைவனை அடைதல், இறைவன் அருள்பெறல் போன்றவற்றை விளக்குவதாகத் திருப்பாவை அமைந்துள்ளது. உலக இலக்கியங்களில் பெண்களுக்கென எழுந்த ஒரு பக்தி இலக்கியம் திருப்பாவை ஆகும். அத்தகைய திருப்பாவையில் இடம்பெறும் உட்கருத்துக்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## பாவை நோன்பின் நோக்கம்

மிகவும் பீடுடைய மாதம் மார்கழி. மார்கழி மாதத்தில் தான் பாவை நோன்பு நோற்கப்படுகிறது. பாவை நோன்பின் நோக்கம் நாட்டின் வளம் பெருக நல்ல மழை பெய்ய வேண்டும் என்று வேண்டுவது. மேலும், கன்னிப்பெண்கள் தமக்கு நற்கணவர் கிடைக்க வேண்டி வழிபடுவதாகும். இவ்வாறு இம்மைப் பயன் கருதி இளம் பெண்களால் பண்டைக்காலத்தில் நடத்தப்பட்டு வந்த பாவை நோன்பு பிற்காலத்தில் மறுமை கருதி அடியவர்களால், கடவுள் பரமாகப் பெருமையைப் பெற்றது. பாவை என்ற சொல்லுக்குத் திருமகள் என்று பொருள். இப்போது பாவை நோன்பு ஆண், பெண் இருபாலரும் மேற்கொள்ளும் விரதமாக வளர்ந்து விட்டது. பாவை பாசுரங்களை ஆழமாக உற்று நோக்கினால் ஜீவாத்மா பரமாத்மாவைத் தஞ்சமடைவதே ஜீவனின் குறிக்கோள் என்னும் தத்துவத்தை உடையதாக இருப்பது புலனாகும்.

“கூற்றம் குறித்தலும் கைகூடும் நோற்றலின்

ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு (குறள்.269)

என்று நோன்பின் ஆற்றலை வள்ளுவரும் குறிப்பிட்டுள்ளார்.

## நோன்பிற்கான காலம்

ஆண்டாள் நோன்பு நோற்பதற்கான காலமாக மார்கழி மாதத்தைத் தேர்வு செய்துள்ளாள். 365 நாள் கொண்டது ஓர் ஆண்டு. ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள். நமது ஆறு மாதங்கள் அவர்களுக்கு ஒரு பகல். ஆறு மாதங்கள் ஓர் இரவாகும். இதில் நமக்கு ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய உள்ள ஆறு மாதங்கள் தட்சிணாயனம் என்றும் தை மாதம் முதல் ஆனி முடிய உள்ள ஆறு மாதங்கள் உத்தராயண காலம் என்றும் கூறப்படும். மார்கழி அதிகாலை நேரத்தில் ஒசோன் படலத்தில் நல்ல பலன் கிடைக்கும் நேரம். தேவர்கள் இறைவனைத் தொழுது இறையுணர்வில் இருக்கும் அதே நேரத்தில் பக்தியுடன் பாவை நோன்பு நோற்க ஆண்டாள் தேர்ந்தெடுத்தது கூட மிகவும் வியப்பானதாகும்.

ஆண்டாள் திருப்பாவையின் முதல் பாசுரத்தில் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' என்று குறிப்பிட்டுள்ளாள். நிறைமதி என்பது என்பது பௌர்ணமியைக் குறிக்கும். "மார்கழி மாதம் தனுசு ராசியில் சூரியன் இருப்பான். இதற்கு ஏழாவது ராசியான மிதுன ராசியில் சந்திரன் வரும் தினமே பௌர்ணமி ஆகும். சூரியன் தனுசு ராசியில் இருக்க, மிதுன ராசியில் உள்ள திருவாதிரை நட்சத்திரத்தில் சந்திரன் வரும் காலமே மார்கழி மாதப் பௌர்ணமியாகும். வானவியல் ரீதியாக இந்த நிகழ்வும் பல ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் நிகழ்வாகும். ஆண்டாள் நோன்பு நோற்கத் துவங்கிய மார்கழி மாதம் முதல் நாள் பௌர்ணமி இருந்திருக்கக் கூடும்" எனவே, ஆண்டாள் மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் என்று குறிப்பிட்டுள்ளது வியத்தற்குரியது.

## இறைவனுக்குரிய நிலைகள்

இறைவனுக்கான அன்றாட சடங்குகளைச் செய்வது சரியை எனப்படும். திருப்பாவையில் கூறப்படும் நீராடல், ஐயமும் பிச்சையும் கொடுத்தல், திருநாமம் கூறல், மலர்த் தூவி வழிபடல் போன்றவை சரியை ஆகும்.

வைணவர்கள் இறைவனுக்குரிய நிலைகளை 5 ஆகக் கூறுவர். அவையாவன பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பன. இவ்வைந்து நிலைகளும் திருப்பாவையில் முதல் 5 பாசுரங்களில் வரிசையாகக் கூறப்பட்டுள்ளது.

### பரம்

"நாராயணனே ஊடறுத்தவன்" என்பதால் இறைவனது யாவற்றையும் கடந்த நிலையான பரமபதத்தை உணர்த்துகின்றது.

### வியூகம்

இறைவன் பாற்கடலில் துயின்று கொண்டிருக்கின்ற வியூக நிலை.

பாற்கடலுள் பையத் துயின்ற பரமன் (திருப்.2)

வெள்ளத்தாவில் துயிலமர்ந்த வித்து (திருப்.6)

என்று ஆண்டாள் குறிப்பிடுகிறாள். இறைவனின் சிந்தனையெல்லாம் இந்த உலகினத்தினருக்கு எப்படி உதவலாம் என்பதே. 'வித்து' என்பது உலகின் முதற்பொருள். விதையை நீர்ப் பாங்கான நிலத்தில்தான் விதைப்பார்கள். இந்த வித்து வெள்ளத்திலேயே உறைகிறது என்கிறாள். பிறவிக்கடலில் இருந்து மீள வழி தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். தரமான விதையை நட்டால்தான் மரம் முளைக்கும். இதே கருத்தை,

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்

தவாஅப் பிறப்பினும் வித்து (குறள்.361)

என்று வள்ளுவரும் கூறியுள்ளார். அப்பிறவிக்கடலில் இருந்து மீளும் வழியையும்,

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்

இறைவனடி சேரா தார் (குறள்.10)

என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

### அந்தர்யாமித்துவம்

எப்பொருளிலும் ஊடுருவி நிற்கும் நிலையே அந்தர்யாமித்துவம் ஆகும். இறைவனின் மேனி போல் கறுத்து, அவன் கையில் ஆழி போல் மின்னி, வலம் புரி போல் இடித்து, சாரங்கம் உதைத்த சரமழை போல் மழை பெய்யுமாறு பாவையர் வேண்டுகின்றனர். இங்கு இயற்கையில் இறைவன் ஊடுருவி நிற்கும் நிலையைக் காணலாம்.

### பிரபந்தி

இறையன்பில் உயர்ந்த நிலை பிரபந்தி. இதற்கு முற்றிலும் இறைவனைச் சரணடைதல் என்பது பொருள். பிரபந்திக்கு இன்றியமையாத கூறுகள்:

1. இறைவனுக்கு விருப்பமானவற்றையே செய்தல்
2. இறைவனுக்கு விருப்பமில்லாதவற்றைக் களைதல்
3. இறைவன் காப்பான் என்ற நம்பிக்கையோடிருத்தல்
4. இறைவன் காவலை வேண்டி நிற்றல்
5. இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்தல்
6. தான் ஒன்றுமில்லை என எண்ணுதல்

இத்தகைய நற்குணங்கள் அமையப் பெற்றவர்களாகத் திருப்பாவையில் மகளிர் திகழ்கின்றனர்.

### திருப்பாவையின் மறைபொருள்

திருப்பாவையின் 6 ஆவது பாடல் முதல் 15 ஆவது பாடல் வரையுள்ள செய்திகளை வெளிப்படையாகப் பார்த்தால் பெண்களை நீராட எழுப்புவணத போல் தோன்றும். ஆனால், நுட்பமாக ஆராய்ந்தோமேயானால் ஒவ்வோர் ஆழ்வாரையும் எழுப்பி, அவர்களின் அருள் வேண்டுவதாக அமைந்துள்ளது. பத்து ஆழ்வார்களை, பத்து குருமார்களை, பஞ்சலட்சக் குடிப்பிறந்த கோபிகளைக் கர்மேந்திரியமும் ஞானேந்திரியமுமான பத்துப் புலன்களை எழுப்புவதாக ஐதீகம். திருப்பாவையைப் பொருத்தவரை எழுப்புபவர்கள் சாமானியர்கள். தூங்குகிறவர்கள் மிகப்பெரியவர்கள்.

#### ஆறாவது பாடல்: பெரியாழ்வார்

புள்ளும் சிலம்பின காண் - பறவை ஒலி எழுப்புவது பொழுது விடிந்தற்கு அடையாளம். பறவைகள் சோலைகள், நந்தவனத்தில் குடியிருக்கும் பெரியாழ்வாரும் அரங்கனுக்குப் பூப்பறிக்க எப்போதும் நந்தவனத்திலேயே இருப்பார். கருடாழ்வாரின் அம்சமாக பெரியாழ்வாரைக் குறிப்பர். புள்ளரையான் கோயில் என்பது கருடாழ்வாரின் கோயிலைக் குறிக்கும். ‘முனிவர்கள் யோகிகள்’ பற்றற்றவர்கள். அதைப்போலவே பெரியாழ்வார் பகவானிடம் எதையும் விரும்பிக் கேட்கவில்லை. எனவே, இப்பாசுரம் பெரியாழ்வாரை எழுப்புவதாகக் கருத வாய்ப்புள்ளது.

ஏழாவது பாடல்: குலசேகராழ்வார்

கீசுகீசு என்று எங்கும் ஆனைச் சாத்தான் என்ற பாடலில் வரும் 'ஆனைச் சாத்தான்' அதாவது வலிநன் எனப்படும் பறவை மலையாளத்தில் 'ஆனைச் சாதம்' என்று வழங்கப்படுகிறது. ஆசைச் சாத்தன் என்பது மலையான மொழியின் திரிபு. குலசேகராழ்வார் சேர மரபைச் சார்ந்தவர். 'காசும் பிறப்பும்' என்பதற்குக் குலசேகராழ்வார் அவையில் எப்போதும் வைணவர்களே நிறைந்திருப்பர். அதை மந்திரிகள் விரும்பவில்லை. எனவே, அவர்கள் பெருமாளின் ஆபரணத்தைத் திருடி மறைத்து விட்டு, அப்பழியைப் பாகவதர்கள் மேல் போட்டுவிட்டார்கள். அதைக் குலசேகராழ்வார் மறுக்க, பாம்புள்ள குடத்தில் கையை விட்டார். பாம்பு அவரைத் தீண்டவில்லை. வெளியே வந்து தலையை ஆட்டி மூன்று முறை சத்தியம் செய்து போயிற்று. பிறகு நகையை மறைத்தவர்கள் மன்னிப்புக் கேட்டு, நகையைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். இந்த வரலாற்றை நினைவூட்டும் விதமாகத்தான் காசு என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. ஊனேறு செல்வத்து எனத் தொடங்கும் பாசுரங்களில் திருவேங்கட மலையில் ஏதேனும் ஒரு பிறப்பை வேண்டியதை ஒப்பிட்டுப் பார்த்தால் அது பிறப்பு என்பதைக் குறிப்பிடுவதை உணரலாம். மேலும், கிருஷ்ணன் கேசியை அழித்த செய்தியை முதன்முதலில் பேசியவர் குலசேகராழ்வார் என்பதால் இப்பாசுரம் குலசேகரரை அருள் பாலிக்க வருமாறு அழைப்பதாகக் கருத இடமுண்டு.

## எட்டாவது பாடல்: நம்மாழ்வார்

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு இதில் கிழக்கு உதித்தது என்பது நம்மாழ்வாரின் பிறப்பினோடு ஒப்பிட வாய்ப்புள்ளது. நம்மாழ்வார் அவதரித்தது வகுள பூ~ண பாஸ்கரதோயம் என்பார்கள். அதாவது சூரியன் உதித்து இருள் அகல்வது போல நம்மாழ்வார் அவதரித்ததும் அஞ்ஞான இருள் அகன்றது என்று கூறப்படுகிறது. 'சிறுவீடு' என்பது உலக வாழ்க்கையைக் குறிக்கிறது. சிறுவீடு என்று இருந்தால் பெருவீடு என்ற ஒன்றும் உண்டு. எனவே, பெருவீடு என்பது மோட்சம். ஆத்மாவை அறிந்து அனந்தப்பட்டு நின்று விடக்கூடாது. அதைத் தாண்டி மோட்சம் உள்ளதை உணர்த்தி 'போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக் கூவுவான் - என்ற வரிகளில் வடதேசம் நோக்கி யாத்திரை போய்க் கொண்டிருந்த மதுரகவியைப் போகாமல் குருகூருக்கு அழைத்த செய்தியை அறியலாம். 'எழுந்திராய்' என்று நம்மாழ்வாரையே எழுப்புகிறார். உட்கார்ந்திருப்பவரைத்தான் எழுப்ப முடியும். ஆழ்வார் பெருமக்களில் நம்மாழ்வார் மட்டுமே அமர்ந்த கோலத்தில் இருப்பவர். எனவே, இப்பாசுரம் நம்மாழ்வாரின் அருள் வேண்ட எழுப்புவதாக அமைந்துள்ளது என்பதை அறியலாம்.

## ஒன்பதாவது பாசுரம் : திருமழிசையாழ்வார்

திருமழிசையாழ்வார் திருமாலின் சயனக் கோலத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அதைத்தான் இங்குத் துயிலணை மேல் கண் வளர என்று காட்டுகிறார். அவன் படுத்திருக்கும் திவ்ய தேசங்கள் எல்லாவற்றையும் இவர் ஒரு பாசுரத்தில் அருளிச் செய்துள்ளார்.

நாகத் தணைக்குடந்தை வெஃகா திருவெவ்வுள்

நாகத் தணையரங்கம் பேரன்பில் - நாகத்

தணைப் பாற்கடல் கிடக்கும் ஆதி நெடுமால்

அணைப்பார் கருத்தனா வான்

தம் உள்ளே உள்ள இறைவனைத் தம்மை எதிர்த்து மறுத்தவர்கள் காணும்படியாகக் காட்டிய ஆழ்வார் திருமழிசையாழ்வார். திருக்குடந்தையில் உள்ள ஆராவமுதனிடம் ஏற்பட்ட ஈடுபாட்டால் இவர் ஆராவமுதத்தாழ்வார் எனவும் வழங்கப்படுகிறார். எனவே, இப்பாசுரம் திருமழிசையாழ்வாரையே அருள் பாலிக்க எழுப்புமாறு அமைந்துள்ளதை அறியலாம்.

### பத்தாம் பாடல்: பேயாழ்வார்

மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார் என்ற வரி, திருக்கோவிலூர் என்ற ஊரில் சிறிய இடத்தில் மழை பெய்ததன் காரணமாக, பொய்கையாழ்வார் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டார். பின்னர் பூதத்தாழ்வார் வந்து கதவைத் தட்டப் பொய்கையார் திறந்தார். பின்னர் யாரும் வரவில்லை. கதவைத் தட்டவில்லை. யாருக்கும் கதவைத் திறக்க வேண்டிய அவசியமும் இல்லை. எனவே, வாசல் திறவாதார் ஆகிறார் பேயாழ்வார் என்னும் கதையை நினைவூட்டுகிறது. மேலும், பேயாழ்வார் துளசியின் மீது அதிகமான பாசுரங்களைப் பாடியுள்ளார். மேலும், கும்பகருணண் என்பதில் கும்பம் என்பது கலசத்தையும் கரணம் என்பது காரணத்தையும் குறிக்கும். கலசத்தைக் காரணமாகக் கொண்டு பிறந்தவர் அகத்திய முனிவர். அகத்திய முனிவரே தோற்றுப் போகும்படியான நாவன்மை உடையவர் பேயாழ்வார். எனவே, அகத்தியரே தோற்று உனக்குத் தமிழ்ப புலமையைத் தந்துவிட்டாரோ என்றும் பொருள் கொள்ள வாய்ப்புள்ளதையும் இப்பாசுரம் பேயாழ்வாரைக் குறிப்பதாக அமைந்துள்ளதை அறியலாம்.

### பதினொன்றாவது பாடல்: பூதத்தாழ்வார்

கற்றுக்கறவை கணங்கள் பலகறந்து என்ற பாசுரத்தில் பொற்கொடியே என்பது பூதத்தாழ்வாரைக் குறிக்கும். அவர்தம் பாசுரங்களில் தம்மைப் பொற்கொடியாகக் கூறிக்கொள்வார். ‘கோல்தேடி ஓடும் மனம் என்பது அவர் வாக்கு. பூத்தாழ்வார் திருக்கடல் மல்லை மகாபலிபுரத்தில் அவதரித்தார். கடற்கரைச் சோலையில் மயில் இருக்கும். மயில் மேகத்தைக் கண்டால் ஆடும். மேகம் நீர் முகந்து கொள்ள கடலுக்கு வரும். அப்போது ஆடும். எனவே புனமயில் என்பது பூதத்தாழ்வாரைக் குறிக்கும்.

சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் என்பதில் பூதத்தாழ்வார் சுட்டப்படுகிறார். எப்படியெனில் பொய்கையாழ்வாரும் பேயாழ்வாரும் இவருக்குச் சுற்றமாவார்கள் பிற ஆழ்வார்கள் அனைவரும் தோழிகள் ஆவர். எனவே, இப்பாசுரம் பூதத்தாழ்வாரைத் துயில் எழுப்புதாக அமைந்துள்ளதை அறியலாம்.

### பன்னிரண்டாம் பாடல்: பொய்கையாழ்வார்

கனைத்திளம் கற்றெருமை கன்றுக்கிரங்கி இப்பாசுரம் பொய்கையாழ்வாரை அருள் வேண்டி எழுப்புவதாக அமைந்துள்ளது. இவர் காஞ்சிபுரத்தில் உள்ள திருவெஃகா என்னும் திவ்யதேசத்தில் பொய்கையில் உள்ள தாமரை மலரில் அவதரித்தவர். தாயார் மகாலட்சுமி தோன்றியதும் தாமரை மலர். எனவே, மகாலட்சுமி ஆழ்வாருக்குத் தங்கை முறையாகிறாள். எனவேதான், ‘நற்சொல்வன் தங்காய்’ என்று அழைப்பது பொய்கையாழ்வாரைச் சுட்டுகிறது எனலாம்.

### பதின்மூன்றாவது பாடல்: தொண்டரடிப்பொடியாழ்வார்

இப்பாசுரத்தில் ‘பாவாய்’ என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இதற்குப் பரம ஏகாந்தி என்பது பொருள். ஆழ்வார்கள் இவர் மட்டுமே ஏகாந்தியாவார். ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியுள்ள அரங்கனைத் தவிர வேறு எந்தத் திவ்ய தேசத்துப் பொருமாளையும் மங்களாசாசனம் செய்யவில்லை. மேலும், ‘நன்னாளால்’ என்பது முதல் பாசுரத்தில் உள்ள மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் என்பதை நினைவூட்டுகிறது. மேலும், தொண்டரடிப் பொடியாழ்வார் மார்கழி மாதம் பிறந்தவர். ‘பள்ளிக்கிடத்தியோ ’ என்பது இவர் சில காலம் தேவதேவி என்னும் தாசியிடம் மயங்கி நீராடல், விரதம் மறந்து பள்ளிக்கிடந்தார் என்பதை உணர்த்துகிறது. ஆகையால் இப்பாசுரம் தொண்டரடிப் பொடியாழ்வாரை வேண்டுவதாக அமைந்துள்ளது.

### பதினான்காவது பாசுரம்: திருப்பாணாழ்வார்

இப்பாசுரத்தில் இடம்பெறும் நாவுடையாய் என்பதற்கு நாவன்மை உடையவர் என்பது பொருள். திருப்பாணாழ்வார் 10 பாசுரங்கள் தாம் பாடியுள்ளார். ஆனால், இவற்றை ஒரு தட்டில் வைத்து மீதி ஆழ்வார் பாசுரங்கள் அனைத்தையும் ஒரு தட்டில் வைத்தால் இவர் பாசுரங்கள்தான் கனமாக இருக்கும்.

மேலும் பெருமாளின் கண்ணழகில் மிகுதியான ஈடுபாடுடையவர். எனவே, இப்பாசுரம் திருப்பாணாழ்வாரை எழுப்புவதாக அமைந்துள்ளது.

### பதினைந்தாவது பாசுரம்: திருமங்கையாழ்வார்

இப்பாசுரம் இருவர் உரையாடுவது போல அமைந்துள்ளது. திருமங்கையாழ்வாரும் இருவர் உரையாடுவது போலத் திருச்சாழல் பாசுரங்களில் பாடியுள்ளார். இளங்கிளியே - சொன்னதைச் சொல்லும் கிளி. இவரும் நம்மாழ்வார் நான்கு மறைகளை நான்கு பிரபந்தங்களில் சொல்லியிருப்பதை ஆறு அங்கங்களாகப் பாடியுள்ளார். தம்மைக் கிளி என்றே சொல்லிக் கொள்வார். உனக்கென்ன வேறுடையை என்பது திருமங்கையாழ்வார் எப்படி பிற ஆழ்வார்களிடமிருந்து வேறுபடுகிறார் என்பதைக் காட்டுகிறது. இவர் மட்டுமே பாடல் பாடியவர். நீர் மேல் நடப்பது போன்று விசித்திரங்கள் செய்து காட்டியவர்.

## முடிவுரை

உறங்கிக் கொண்டிருக்கும் ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் இணைய தட்டியெழுப்பும் பாசுரங்களாகத் திருப்பாவை அமைந்துள்ளது. நாட்டின் வளம் பெருக மழை பெய்ய வேண்டும். கன்னிப் பெண்கள் தமக்கு நல்ல கணவர் வாய்க்கப் பெறவேண்டும் என்று வேண்டுவதாகத் திருப்பாவை அமைந்துள்ளது. இறைவனுக்குரிய நிலைகளாக பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது. திருப்பாவையின் 6 ஆவது பாசுரம் முதல் 15 ஆவது பாசுரம் வரையுள்ள பாசுரங்கள் மேற்போக்காக மகளிரை நீராட அழைப்பதாக இருந்தாலும் உட்பொருள் மீதியிருக்கும் 10 ஆழ்வார்களை அருள் வழங்க எழுப்புவதாக அமைந்துள்ளது. திருப்பாவையில் மதுரகவியாழ்வாரைப் பற்றிய பாடல் இடம்பெறவில்லை என்பதற்கான காரணம் ஆய்வுக்குட்பட்டதாக அமைந்துள்ளது.

## References

Raghavadasan, V. S. V., (2005) Nalayira Divya Prabandham, Mulai Nilaiyam, Chennai, India.

Sivasubramanian, A., (2015) Manthiramum Sadangukalum, Commercial Publication, Thiruthangal, India.

Vagulavalli, S., (2018) Paavai Padalum Vethathiriyamum, World Tamil Reeserach Centre, Chennai, India.

### Acknowledgement
Nil

### Funding
This study was not funded by any grant

### Conflict of interest
The author declare that they have no actual or potential conflict of interest, including financial, personal or other relationships with people or organizations that could have inappropriately influenced this work.

### About the License
© The author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

P. Sivashakthi, The Vedic truths in the Thiruppavai An analysis, Indian Journal of Tamil, 2(2) (2021) 30-36. https://doi.org/10.34256/ijot2125